மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பாக முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி பழங்காநத்தம் பகுதிக்குட்பட்ட 67வது வார்டு பகுதி குடும்ப அட்டைதாரர்களுக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் பகுதி செயலாளர் எஸ். வி.சுதன், வட்டச் செயலாளர் பாக்யராஜ் என்ற ராஜேஷ், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் கணேசன், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் வீரகணேசன், மாமன்ற உறுப்பினர் நாகநாதன், இளைஞரணி துணை அமைப்பாளர் ஐயப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருமங்கலத்தில் மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் அமைதிப் பேரணியாக சென்று கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் நாகராஜன், ஏர் போர்ட் பாண்டியன், இளமகிழன், லதா அதியமான், வக்கில் பாலாஜி சிவணாண்டி, ஸ்ரீதர், ரம்யா முத்துக்குமார் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.அகஸ்தீசன் ஏற்பாட்டில், மாவட்ட கழக அலுவலகத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில், பகுதியில் உள்ள த.வெ.க. கட்சியை சேர்ந்த மாநகர இளைஞர் அணி இணை அமைப்பாளர் பாரத் தலைமையில் 50–க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அக்கட்சியில் இருந்து விலகி, மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். மாற்றுக் கட்சியில் இருந்து வந்தவர்களை மேயர் ரெ.மகேஷ் சால்வை அணிவித்து வரவேற்றார். நிகழ்வில் நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், பா.பாபு, இ.ஜவகர், த.ஜீவா, என்.பி.துரை, மு. சேக்மீரான், அ.அருண்காந்த், ஞா.பொன் ஜான்சன், செ.சரவணன், ச.வைகுண்ட பெருமாள், காமராஜ், இளங்கோ உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில்

பொறியாளர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கு நேர்காணல்!

மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் அறிக்கை!

திண்டுக்கல், ஆக. 9-

திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில் குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம், நகரம், பகுதி மற்றும் பேரூர் பொறியாளர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்பிற்கு விண்ணப்பித்த கழக உடன்பிறப்புகளுக்கு வரும் 10.08.2025, ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் திண்டுக்கல், மாவட்ட திமுக அலுவலகமான 'கலைஞர் மாளிகையில்" பழனி சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழகச் செயலாளருமான

ஐ.பி.செந்தில்குமார் எம்.ஏ.பி.எல் ஆகிய எனது தலைமையிலும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் என். செந்தில்குமரன், துணை அமைப்பாளர்கள் ஆர். ஸ்ரீரெங்கதுரை, பி.எஸ்.கல்யாண்குமார், ஆர்.சி.எஸ். சரவணன், எம்.எஸ்.ராஜ வேல், எம்.வேல்முருகன் மற்றும் அணித் தலைவர் பா.செந்தில்குமார், துணைத் தலைவர் எஸ். வேல்முருகன் ஆகியோரின் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது.

அது சமயம், ஒன்றியம், நகரம், பகுதி மற்றும் பேரூர் பகுதி பொறியாளர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்பிற்கு கியு. ஆர்.கோடு மூலம் விண்ணப்பித்தவர்களும், பொறியியல், டிப்ளமோ, ஐ.டி.ஐ. போன்ற பொறியியல் துறை சார்ந்த படிப்பினை நிறைவு செய்தவர்களும், தற்பொழுது படித்துக் கொண்டிருப்பவர்களும் நேர்காணலில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்ட

பொறியாளர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தலைமை – எஸ்.கே.பி.கருணா அறிக்கை!

இராமநாதபுரம், ஆக. 9-

இராமநாதபுரம் மாவட்ட பொறியாளர் அணி. ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்கா ணல். இரமநாதபுரம்,மாவட்டச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராம லிங்கம், எம்.எல்.ஏ. தலைமையில் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.

இந்த நேர்காணலில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறியாளர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இராமநாதபுரம் மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல் நடைபெறும் இடம்: கே.எஸ்.எம். பார்ட்டி ஹால், உலகநாதபுரம், [அருட் சான்று நிலையம் எதிரில்], வேந்தோணி.பரமக்குடி, நாள்: 10.08.2025 நேரம்: காலை 09.30 மணி.

இவ்வாறு தி.மு.க. பொறியாளர் அணி மாநிலச் செயலாளர் எஸ். கே.பி. கருணா அறிக்கை விடுத்துள்ளார்.

மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் நாகர்கோவிலில்

மாற்றுக் கட்சியை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்!

நாகர்கோவில், ஆக.9-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்றபின் அவரது ஆட்சியின் செயல்பாடுகளை பார்த்து பல்வேறு மாற்றுக் கட்சியை சேர்ந்தவர்கள் தொடர்ந்து தி.மு.க.வில் இணைந்து வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.அகஸ்தீசன் ஏற்பாட்டில், நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில், பகுதியில் உள்ள த.வெ.க. கட்சியை சேர்ந்த மாநகர இளைஞர் அணி இணை அமைப்பாளர் பாரத் தலைமையில் 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அக்கட்சியில் இருந்து விலகி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.

மாற்றுக் கட்சியில் இருந்து வந்தவர்களை மேயர் ரெ.மகேஷ் சால்வை அணிவித்து வரவேற்றார்.

நிகழ்வில் நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய செயலாளர் பா.பாபு, பகுதி செயலாளர்கள் இ.ஜவகர், த.ஜீவா, என்.பி.துரை, மு.சேக்மீரான், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அ.அருண்காந்த், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஞா.பொன் ஜான்சன், செ.சரவணன், பேரூர் செயலாளர்கள் ச.வைகுண்ட பெருமாள், காமராஜ், இளங்கோ உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பரமக்குடி மேற்கு ஒன்றியம் பார்த்திபனூர் சமுதாய கூடத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமினை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன் பார்வையிட்டு மனுக்களை பெற்றார். உடன் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி,பரமக்குடி கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அந்தோணி தாஸ் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் துணை வட்டாட்சியர் வெங்கடாஜலபதி, கிராம நிர்வாக அலுவலர் சத்தியேந்திரன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்: 03.03.1935

மறைவு: 07.08.2025

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடியும் தொ.மு.ச.பேரவையின் முன்னாள் துணைத் தலைவருமான

இரெ.கோவிந்தசாமி அவர்கள்

07.08.2025 வியாழக்கிழமை காலை 8.15 மணியளவில்

இயற்கை எய்தினார்

அவரது உடல் ரமேஷ் நகர் 3வது குறுக்குத் தெரு மேற்கு தாம்பரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது

அன்னாரின் இறுதி ஊர்வலம் 08.08.2025 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆழ்ந்த வருத்தங்களுடன்...

மகன்கள் - மகள்:

கோ.திருமாவளவன், கோ.நன்மாறன் (அரசு வழக்கறிஞர்- சென்னை உயர்நீதிமன்றம்)

கோ.இளங்கோ, கோ.கோப்பெருந்தேவி

மற்றும் குடும்பத்தினர்கள், உறவினர்கள் - நண்பர்கள்